**தம்புள்ள பிரதேச சபை**
**மாத்தளை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஒக்தோபர் 07 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தம்புள்ள பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மூன்று நிர்மாணங்களுகரிய கடன்கொடுத்தோர் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,095,644 தொகை கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் வருமானத்திற்கு எடுக்கப்படாத மற்றும் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்த மூன்று நிறுவனங்களுக்குரிய ரூபா 10,673,235 கூட்டுப்பெறுமதி வருமானங்களிலிருந்து விடுபட்டிருந்தன.

(இ) முன்னைய ஆண்டுகளுக்குரிய வருமானம் மீளாய்வாண்டின் வருமானமாக 4 நிறுவனங்களுக்குரித்தாக ரூபா 13,279,874 கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) இரண்டு சொத்துக்களுக்குரிய ரூபா 9,369,158 குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) 2015 ஆம் ஆண்டில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் கூட்டிக்காட்டப்பட்ட எனினும் சீராக்கப்படாத 05 நிறுவனங்களுக்குரிய ரூபா 1,009,179 தொகை மீளாய்வாண்டின் போதும் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற ரூபா 27,788,769 கூட்டுத்தொகையான 6 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளுக்கும் அவற்றுக்குரிய பட்டோலைகள் மற்றும் அறிக்கைகளில் காணப்படும் மீதிகளுக்கு இடையே வேறுபாடுகள் காணப்பட்டதுடன் அவதானிக்கப்பட்ட வேறுபாடுகளின் கூட்டுத்தொகை ரூபா 13,385,179 ஆக இருந்தது.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

நீண்ட காலமாக நிதிக்கூற்றுக்களில் மாற்றமின்றி முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 1,944,292 கூட்டுத்தொகையான பெறவேண்டிய 05 கணக்கு மீதிகளின் பெறுமதி மற்றும் ரூபா 20,070,460 பெறுமதியான செலுத்த வேண்டிய 03 கணக்கு மீதிகளைத் தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ரூபா 27,838,429 தொகையான 05 கணக்கு விடயங்களுக்குரிய சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் அக்கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக பரீட்சிக்க முடியாதிருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கீழே காண்பிக்கப்படுகின்ற சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங் களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.5 மற்றும் 4.6 உப பிரிவுகள் | மீளாய்வாண்டின் இறுதியில் 20 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 132,355 ஆன ஊழியர் கடன் தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 570 மற்றும் 572(2) | ரூபா 398,024 தொகையான நிறுத்தி வைக்கப்பட்ட தொகை செயற்திட்டம் பூர்த்தி செய்த திகதி முதல் இரண்டு வருடங்கள் கடந்திருந்த போதிலும், அரச வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (இ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக் கோவையின் 204 ஆம் இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நடாத்தப்பட்ட பொருள் மெய்மையாய்வின் போது கண்டறியப்பட்ட 37 பொருட்கள் குறை தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 36,205,630 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 27,343,420 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 8,862,210 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 குத்தகை வாடகை

நிகவட்டவனவில் அமைந்துள்ள இறைச்சிக் கடை கூறுவிலை கோராமல் முன்னைய ஆண்டின் குத்தகையாளருக்கு முன்னைய ஆண்டின் குத்தகை வாடகையான ரூபா 350,000 இற்கு குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்

சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ளஇலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி ஆகிய இரண்டு கிளைகளிலிருந்தும் வருடாந்தம் அறவிடப்பட வேண்டிய வாடகை தொகையான ரூபா 3,000 அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்ட திகதியிலிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 ஏனைய வருமானங்கள்

மீளாய்வாண்டின் இறுதி வரையில் மோட்டார் வாகன நிறுத்துமிட நிலுவை வாடகையாக கணக்கில் காண்பிக்கப்பட்ட ரூபா 1,044,160 தொகை வருடக் கணக்காக கிடைக்க வேண்டியிருந்தது.

### 2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய முத்திரைக் கட்டணமாக ரூபா 10,545,992 தொகையும் நீதிமன்றத் தண்டப்பண வருமானமாக ரூபா 625,050 தொகையும் அறவிடப்பட வேண்டியிருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொருள் மெய்மையாய்வின் பிரகாரம் கிபிஸ்ஸ நூலகத்தில் 292 புத்தகங்கள் பற்றாக்குறையாக இருப்பதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், சபையால் அது தொடர்பாக பொறுப்பு வாய்ந்த நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அலுவலக கட்டிடம் அமைந்துள்ள காணியும், சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள 84 மயானங்கள், 43 சனசமூக மண்டபங்கள், 13 விளையாட்டரங்குகள் என்பவற்றினை அளவீட்டு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வெவ்வேறு நிறுவனங்களிடமிருந்து கிடைத்த சபையால் பயன்படுத்திய 04 வாகனங்கள் சபையின் பெயரில் கையேற்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) தம்புள்ள மொத்த களஞ்சியம் 1996 ஆம் ஆண்டில் நிர்மாணத்தில் பல்வேறு குறைபாடுகள் காரணமாக இறுதி தவணைகள் சபையால் கொடுப்பனவு செய்யாமையால் சபைக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்பு சபைக்கு பாதகமாக இருந்தமையாலும் சபை நிதியத்திலிருந்து ஒப்பந்தக்காரருக்கு ரூபா 4,068,099 தொகை செலுத்த நேர்ந்தமை, சபையின் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களால்

வழக்கிற்குரிய விடயங்களை சரியாக சமர்ப்பிக்கப்படாமை மற்றும் உரிய கவனமில்லாமல் நடவடிக்கை எடுத்தமையால் சபை நிதியத்திற்கு ஏற்பட்ட நட்டமொன்றாக அவதானிக்கப்பட்டதுடன் வழக்கு கட்டணமாக ரூபா 685,452 தொகை சபை நிதியத்தில் செலவிடப்பட்டிருந்தது.

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

சபைக்குச் சொந்தமான JCB இயந்திரம் மற்றும் வீதிப் பதப்படுத்தல் இயந்திரம் என்பவற்றை வெளித்தரப்பினருக்கு வாடகைக்கு வழங்கும் போது இந்த இயந்திரங்களை நிறுவனத்திலிருந்து வெளியேறும் போதும் உள்ளே வரும் போது அதன் மைலோ மீற்றரை பரீட்சித்து முறையாக கட்டுப்பாடொன்றை ஏற்படுத்தப்படும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் வாடகைக்கு வழங்கும் பதிவேட்டில் பயன்படுத்திய மணித்தியாலங்களின் எண்ணிக்கை, தேவைப்படும் இடம், தேவைக்குரிய சேவை நாடுனரின் பெயர் என்பன குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

## 3.3. விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபைக்குச் சொந்தமான 2 வாகனங்கள் நீண்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டன.

(ஆ) விபத்திற்குட்பட்ட கெப் வண்டி தற்போது 2 ஆண்டு காலமாக திருத்தம் செய்யப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

(இ) பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத உழவுஇயந்திரமொன்று நீண்டகாலமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 இனங்காணப்பட்ட நட்டம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடமிருந்து கிடைத்த நிசான் நவாரா வகை கெப் வண்டி 2015 ஏப்ரல் 13 ஆந் திகதி விபத்திற்குட்பட்டமை தொடர்பாக நியமிக்கப்பட்ட குழுவினால் நிதிப்பிரமாணம் 104(4) இன் கீழ் நட்டமொன்று தொடர்பாக வழங்கப்பட்டிருந்த 2016 சனவரி 17 ஆந் திகதிய இறுதி அறிக்கைகளின் பிரகாரம், அந்நட்டத்தின் பெறுமதியை முன்னைய தலைவரிடமிருந்து ரூபா 7,188,851 தொகையும் சாரதியிடமிருந்து ரூபா 798,761 தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் பொருள் பற்றாக்குறையாக காண்பிக்கப்பட்டுள்ள 125 தம்ரோ கதிரைகளும், 175 GI குழாய்களின் கூட்டுப் பெறுமதியான ரூபா 170,225 தொகையான பொருள் பற்றாக்குறை தொடர்பாக கணிப்பீட்டு சபையின் பரிந்துரையின் பிரகாரம் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) விளைவற்ற வகையில் நிறுத்தி வைத்திருந்த உழவு இயந்திரமொன்றுக்காக 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டிற்காக காப்புறுதி மேவுகை பெற்றுக்கொள்ளும் பொருட்டு முறையே ரூபா 39,890 மற்றும் ரூபா 39,234 செலவிடப்பட்டிருந்தது.

## 3.5 தாமதமான செயற்றிட்டம்

பொது நிதியத்தின் கீழ் மீளாய்வாண்டில் ரூபா 500,000 இற்கு செயற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த நிகவட்டலன பம்பரகல யாய வீதி அபிவிருத்தி செயற்றிட்டம் ஆண்டின் இறுதி வரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(ஆ) 12 வருமான விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 852,950 ஆன வருமானத்திலிருந்து எவ்வித வருமானமும் உழைக்கப்படாதிருந்தன.

(ஆ) 16 வருமான விடயங்களில் 20 சதவீதம் முதல் 90 சதவீதம் வரையான வீச்சில் இலக்கிடப்பட்ட வருமானத்தை உழைப்பதற்கு முடியாதிருந்தது.

(இ) 14 வருமான விடயங்களில் மதிப்பிடப்பட்டிருந்த வருமானத்தை விஞ்சி 15 சதவீதம் முதல் 2,679 சதவீதம் வரையான வீச்சில் வருமானம் உழைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 29 செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 383,050 ஆன நிதிஏற்பாடுகளிலிருந்து எவ்வித செலவினமும் மேற்கொள்ளப்படாமல் முழு ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தன.

(உ) 57 செலவின விடயங்களில் தேறிய நிதி ஏற்பாடுகள் மற்றும் உள்ளவாறான செலவினத்திற்கிடையே 22 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சில் விலகல் காணப்பட்டன.

## 4.2 உள்ளகக் கணக்காய்வு

1988 இன் (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக் கோவை 5(7) விதியின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு முறைமை ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதியில் சபையின் விஷேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) காணி கட்டிடங்கள்

(ஆ) வாகனக் கட்டுப்பாடு

(இ) களஞ்சியக் கட்டுப்பாடு

(ஈ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர்

(உ) கணக்குகளைத் தயாரித்தல்